தமிழ் நாடு சட்டப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1972 டிசம்பர் 12.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு

முன்னாள் பேரவை உறுப்பினர் திரு. ஏடி. ஏபி. சௌந்தரவேலு அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : போடிநாயக்கனூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டப்பேரவையில் 1963 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டுவரை உறுப்பினராக இருந்த திரு. ஏடி. ஏபி. சௌந்தரவேலு அவர்கள் 10—12—1972 ஆம் நாளன்று மறைந்ததைக்குறித்து இப்பேரவையின் சார்பில் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்.

2. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

Medical Officers in Panchayat Unions

* 121 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the educational qualifications stipulated for the post of Medical Officers in Panchayat Unions;

(*b*) whether the scale of pay has been fixed on the basis of qualifications; and

(*c*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) எம்.பி.பி.எஸ்., எல்.ஐ.எம்., ஜி.ஸி.ஐ.எம்., பி.ஐ.எம்., எல்.எம்.பி., டி.எம். & எஸ்.

(இ) ஆம்.

(உ) எம்.பி.பி.எஸ்.—ரூ. 525—25—600—30—690—35—900. 900.

எல்.ஐ.எம்.—ரூ. 400—15—475—20—575—25—650.

ஜி.ஸி.ஐ.எம்.—ரூ. 400—15—475—20—575—25—650.

பி.ஐ.எம்.—ரூ. 400—15—475—20—575—25—650.

எல்.எம்.பி.—ரூ. 425—25—600—30—750.

டி.எம். & எஸ்.—ரூ. 425—25—600—30—750.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : தலைவர் அவர்களே, இதைப் போன்ற ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனைகளில் அந்தந்தப் பகுதிகளில் உள்ள கிராம மக்களுக்குத் திருப்தி அளிக்கும் வகையில் மருத்துவச் சிகிச்சை அளிக்கப்படுவதில்லை. அங்கிருக்கும் மருத்துவ அதிகாரிகளைக் கேட்டால், எங்களுக்குப் போதுமான மருந்துகள் வாங்கிக்கொள்வதற்குப் பண வசதி இல்லை என்று புகார்கள் சொல்லுகிறார்கள். இதை எதிர்காலத்திலாவது நிவர்த்திக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்தால் நடத்தப்படுகிற மருத்துவ மனைகளுக்கு ஊராட்சி ஒன்றியங்கள் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். அந்த ஒன்றியங்கள் மருந்துக்காக ஆகும் செலவை அதிகமாக ஏற்றுக்கொண்டால் அந்த மருந்தகங்கள் செம்மையாக நடைபெறும். அப்படி அவர்கள் பொறுப்பை ஏற்றுக்கொண்டு செயல்படாத காரணத்தால், பல ஒன்றிய மருத்துவ மனைகளை அரசு ஏற்று நடத்துவது என்ற திட்டம் ஏற்கப்பட்டு, இந்த ஆண்டு 40 ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனைகள் அரசால் ஏற்கப்பட்டிருக்கின்றன. அடுத்த ஆண்டு அதே அளவுக்கு ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏனென்றால், ஒவ்வொரு மருத்துவ மனைக்கும் ஊராட்சிய ஒன்றியத்தால் நடத்தப்படும்போது ரூ. 15,000 செலவாகிறது. அரசு எடுத்துக்கொண்டால் ரூ. 45,000 செலவாகிறது. ஆகவே, அடுத்த ஆண்டு 16 முதல் 20 மருத்துவ மனைகளை எடுத்துக்கொள்ளத் திட்டமிருக்கிறது. இப்படித் தொடர்ந்து சில ஆண்டு காலத்தில் ஒன்றியத்தின் மருத்துவ மனைகள் 200 முதல் 250 வரைக்கும் அரசால் மேற்கொள்ளப்படும்.

1972 டிசம்பர் 12]

திரு. தி. பொன்னுமலை : இந்த ஆண்டு எந்த எந்த மருத்துவ மனைகளை எடுத்துக்கொள்ள இருக்கிறார்கள்? அடுத்த ஆண்டு எந்த எந்த மருத்துவ மனைகள் எடுக்க உத்தேசம் உள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப் பட்டவை நாற்பது மருத்துவ மனைகள். அதற்குப் பின்னர் ஐந்து மருத்துவ மனைகளை எடுத்துக்கொள்ளப் போவதாகத் தெரிவித்திருக் கிறோம். அந்தப் பட்டியல் இப்போது என்னிடம் இல்லை. மாவட்டத்திற்கு இரண்டு மூன்று மருத்துவ மனைகள் வீதம் எல்லா மாவட்டங்களிலும் எடுக்கப்பட ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு எடுத்துக்கொள்வதுபற்றி இனிதான் முடிவு செய்யப் படும்.

திரு. சு. துரைசாமி : இவ்வாறிருக்கும் எல்லா மருத்துவ மனை களையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ள எவ்வளவு காலம் பிடிக்கும்? அரசாங்கம் முனைப்புத் திட்டம் மூலமாக விரைவாக எல்லாவற்றை யும் எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஓராண்டிலே கூட நிறை வேற்றிவிடலாம். ஆனால், அதற்காக ஐந்து கோடி ரூபாய் புதிய செலவினை அரசு ஏற்க வேண்டியிருக்கும்.

Vasectomy operations

* 122 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is a fall in the number of vasectomy operations in this State in recent times; and

(*b*) if so, whether the Government have undertaken any study in this regard?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : 1967–68 முதல் 1970–71-வது ஆண்டுவரை ஆண்களுக்கான குடும்பக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை எண்ணிக்கையில் இறங்குமுகமாக இருந்தது. ஆனால் 1971–72-வது ஆண்டில் இது மிக அதிக அளவில் உயர்ந்துள்ளது.

திரு. என். கிட்டப்பா : அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் அரசு ஊழியர்களுக்கு வேலை உயர்வு அல்லது சிறப்பு ஊதிய உயர்வு அளிக்க அரசு ஆவன செய்ய முன்வருமா? எத்தனை அமைச்சர்கள்,